**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்</u>**

**<u>அ.வ.எண்.37/2024</u>**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ம் நாள் வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மோகன் | தொழில்: | விவசாயம் |
| த/பெ: | செங்கோட்டையன் | சமயம்: | இந்து |
| முகவரி: | எலந்தகுட்டை | வயது: | 45 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

<u>18.02.2026</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 3ம் நபர் ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக  நிரூபண பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் நான் இன்று  தாக்கல் செய்துள்ள கீழ்கண்ட  ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | – | ஆதார் அட்டை (**அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது**) | நகல் | சா.சா.ஆ.1 |

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் நான் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் பூர்வீகமாக அங்குதான் குடியிருக்கிறேன். வாதி மற்றும் பிரதிவாதிகளை எவ்வாறு

தெரியும் என்றால் உறவினர்கள் ஆவர். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி சர்வே எண்.212/10C1ல் சொத்து கிரையம் பெற்றார். ஆனால் சர்வே எண்.211/1 என குறிப்பிடப்பட்டுவிட்டது அதனால் மேற்படி வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தினை வாதி கிரையம் பெற்றாரா என்றால் இல்லை, வாதியின் தாத்தா கிரையம் பெற்றார்.

2) தாவா சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் வாதியின் அனுபவத்தில் உள்ளது. சர்வே எண் மாறிய விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வாதி கூறியதன் பேரில் தெரியும். பிழை திருத்தம் செய்ய வேண்டி வாதி என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் 1,2 பிரதிவாதிகளிடம் கேட்டார், அவர்கள் மறுத்துவிட்டார்கள். பிரதிவாதிகள் என்ன காரணம் கூறி அவ்வாறு பிழைதிருத்தம் செய்வதை மறுத்துவிட்டார்கள் என்றால் 1ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் மாமியார் தான் கிரையம் கொடுத்தார்கள் என்பதால் மறுத்துவிட்டார்கள். தாவா சர்வே எண்ணில் எனக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் எனது தாயின் தந்தை வழியாக பாத்தியம் ஆகும். தற்போது எனது தாயின் தந்தை உயிருடன் இல்லை.

3) வாதி பிரதிவாதிகளிடம் பிழைதிருத்தம் செய்யவேண்டி கேட்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை பிரதிவாதிகளின் முன்னோர்களே கிரையம் செய்து கொடுத்தார்கள் என்பதால் பிழைதிருத்தல் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு தேவைப்பட்டால் உரிய நடவடிக்கைகளை அவரே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**